மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருக்குறள்களில் ‘உம்’ இடைச்சொல்லின் பொருள் பயன்பாடு – ஓர் ஆய்வு

# A Study on The Usage of ‘Um’ Particle’s Defining Functions in Tirukkuṟal

Seeniwasan Sandran / சீனிவாசன் சந்திரன்[1]
Manonmani Devi M.A.R Annamalai / மனோன்மனி தேவி அண்ணாமலை[2*]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.
[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia.

*Corresponding Author’s Email: manonmanidevi@fbk.upsi.edu.my

**ஆய்வுச் சுருக்கம்**

திருக்குறளில் சேர்ந்து வரும் ‘உம்’ இடைச்சொல் உணர்த்தும் பொருளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். தனித்துச் செயற்படும் தன்மை இல்லாமல், பெயரையும் வினையும் இடமாகக் கொண்டு பொருள் தெளிவைக் காட்டுவது இடைச்சொல்லாகும். இடைச்சொற்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், அவை எல்லாச் சொற்களோடும் பெருவழக்கில் வழங்குகின்றன. இடைச்சொல்லில் தத்தம் பொருளுடன் வந்து குறிப்பால் பொருளுணர்த்தும் தனியிடைச் சொற்களும் உண்டு. தனியிடைச் சொற்களில் ‘உம்’ இடைச்சொல்லின் பயன்பாடு இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகிறது. அவ்வகையில், திருவள்ளுவர் தமது குறட்பாக்களில் பல்லிடங்களில் உம் இடைச்சொல்லைப் பயன்படுத்திக் குறிப்பால் பொருளை உணர்த்துகிறார். இது, கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை ஆகிய மூன்று அதிகாரங்களின் முப்பது குறள்களும் ஆய்வுப் பொருளாகத் தெரிவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பண்புசார் ஆய்வாகும். முப்பது குறள்களில் உம் இடைச்சொல்லை ஏற்று வந்துள்ள எட்டுக் குறள்களில் ஆறு முற்றுப்பொருளிலும் இதர இரண்டில் சிறப்பும்மைப் பொருளிலும் (உயர்வுப் சிறப்பு) வருவதாக ஆய்வு முடிவில் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வு, திருக்குறளில் பயின்று வரும் உம் இடைச்சொல்லின் பொருளை அறிந்து கொள்ள வகை செய்கிறது.

**கருச்சொல்:** திருக்குறள், உம், இடைச்சொல், பொருள்

**Abstract**

Tamil grammar considers particles to be an integral part of every word, regardless of their frequency. These particles play a crucial role in defining the meanings of words, depending on the nouns and verbs used. The ‘um’ particle, in particular, has been extensively used in Tamil literature, with Thiruvalluvar employing it in his Thirukural to define specific meanings of words. This study aims to delve deeper into the usage of the ‘um’ particle’s defining functions in Tirukural. The study focuses on three chapters of Tirukkuṟaḷ, namely Kaṭavuḷ vāḻttu, Vāṉ ciṟappu, and Nīttār perumai, comprising a total of 30 Kuṟaṭpākkaḷ. The results indicate that the ‘um’ particle’s defining functions have been employed in 8 Kuṟaṭpākkaḷ out of 30, with 6 Kuṟaṭpākkaḷ having Muṟṟup poruḷ , and the other 2 Kuṟaṭpākkaḷ having Ciṟappum’mai poruḷ(Uyarvu Ciṟappu). This qualitative study provides insights into the defining functions of the ‘um’ particle in Tirukkuṟaḷ.

**Keywords**: Tirukkuṟaḷ, ‘um’, particle, defining functions

## முன்னுரை

தமிழ்மொழியில் இலக்கணப் பயன்பாடு கருதி, வகைப்படுத்தப்பட்ட நான்கு சொற்களில் இடைச்சொல்லும் ஒன்றாகும். இடை என்றால் இடம் என்னும் பொருளுண்டு. ஒரு பெயர் அல்லது வினையின் அகத்திலோ புறத்திலோ இடங்கொண்டு பொருள் உணர்த்துவது இடைச்சொல்லாகும் (ராஜகோபாலாச்சாரியார், 1962). பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் முதல், இடை, கடை என்னும் மூன்று நிலைகளில் நின்று பொருள் தெளிவைக் காட்டுவதாக இடைச்சொல் செயற்படுகிறது(சீனி நைனா முகம்மது, 2013). இடைசொல், தனித்து நின்று பொருள் தர இயலாத் தன்மையைக் கொண்டுள்ளது. இடைச்சொற்களில் குறிப்பால் தத்தம் பொருள் உணர்த்தும் தனியிடைச் சொற்களும் உண்டு. அவை, உம், ஓ, ஏ, மற்று, மன், கொல் எனவாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றுள் 'உம்' இடைச்சொல், ஒரு வாக்கியத்தில் பெயருக்கு அடையாக வரும் சொற்கள், முற்றுவினைகள் நீங்கலாக இதர சொற்களுடன் இணைந்து வெவ்வேறு பொருளைத் தருகின்றது (நுஃமான், 1999). அவ்வகையில், திருவள்ளுவரின் குறட்பாவில் பல்லிடங்களில் உம் இடைச்சொல்லின் பொருள் பயன்பாட்டைக் காண இயலுகின்றது. இந்நிலையில், திருக்குறள்களில் வரும் 'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள் பயன்பாட்டை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## உம் இடைச்சொல்

சொற்களில் சேர்ந்து வரும் உம் என்னும் இடைச்சொல் எட்டுப் பொருளில் வருவதாக,

**“எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை**

**முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கம் என்று**

**அப்பால் எட்டே உம்மைச் சொல்லே”**

**(தொல்காப்பியம் - சொல்லியல் - இடையியல்)**

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அவை எச்சம்(இறந்தது/ எதிரது தழுவிய எச்சம்), சிறப்பு(உயர்வுச் சிறப்பு/ இழிவுச் சிறப்பு), ஐயம், எதிர்மறை, முற்று, எண், தெரிநிலை, ஆக்கம் என்பன ஆகும். இவற்றுக்கிடையே தமக்கேயுரிய பொருள் வேறுபாடு உண்டு.

## ஆய்விலக்கிய மீள்நோக்கு

திருக்குறளில் இடைச்சொல் பயின்று வரும் முறை குறித்து ஆய்வுகள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளன. சு. சரவணன் (2015), 'திருக்குறளில் தன்மை விகுதிகள் – மொழியியல் பார்வை' என்கிற ஆய்வில், தன்மை ஒருமை, பன்மை வினைமுற்று விகுதிகள் தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் எவ்வாறு ஒத்தும் முரண்பட்டும் அமைகின்றன என்பதை ஆராய்ந்துள்ளார். அடுத்து, நவீன் கணேசன், சரண் சுக்லாம் ஆத்மலிங்கம்(2023), 'திருக்குறளில் இடம்பெறும் ஒடு, ஓடு உருபின் பயன்பாடு' ஆய்வில், குறளில் ஒடு, ஓடு உருபு அமையும் முறையையும் அவற்றுள் எவை உடனிகழ்ச்சிப் பொருளைக் கொண்டிருப்பதை ஆய்ந்துள்ளனர். மேலும், தி.தர்மலிங்கம்(2023), 'திருக்குறளில் புதிய உவம உருபுகள்' என்னும் ஆய்வில், தொல்காப்பியர் குறிப்பிட்ட 36 உவம உருபுகள் தவிர்த்து உள்ள பிற உவமவுருபுகள் திருக்குறளில் இடம்பெற்றுள்ளதா என்பதை ஆய்ந்துள்ளார். மேற்சுட்டிய ஆய்வுகள் திருக்குறளில் விகுதிகள், வேற்றுமை உருபு, உவமவுருபுகள் ஆராய்தலை நோக்கமாகக் கொண்டதாகும். ஆகவே, ஆய்வாளரின் இவ்வாய்வு முன்னாய்வுகளோடு வேறுபடுகின்றது.

**ஆய்வு நெறிமுறை**

இஃது ஓர் பண்புசார் முறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். இவ்வாய்வுக்குத் திருக்குறளின் கடவுள் வாழ்த்தும் வான்சிறப்பும் நீத்தார் பெருமையும் ஆகிய மூன்றதிகாரங்கள் உட்படுத்தப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்டுள்ள முதல் மூன்று அதிகாரங்களில் 8 குறள்கள் மட்டும் உம் இடைச்சொல்லை ஏற்று வந்துள்ளன. ஆகவே, இவற்றுள் பயின்று வரும் உம் இடைச்சொல்லின் பொருளினை மட்டுமே இவ்வாய்வு ஆராய்ந்துள்ளது.

**ஆய்வுக் கண்டுபிடிப்பு**

**அ) வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்**

**கியாண்டு மிடும்பை இல. (குறள் 4)**

யாண்டும் = யாண்டு + உம் (முற்றும்மை) + இடும்பை

யாண்டு = எக்காலம்

விளக்கம்: யாண்டும் என்றால் எக்காலமும் எனப் பொருட்படும். இது முக்காலத்தையும் உள்ளடக்கி உள்ளது.

**ஆ) இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்**

**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (குறள் 5)**

இருவினையும் = இரு+ வினை + உம் (முற்றும்மை) + சேரா

விளக்கம்: இங்கு இருவினை என்பது நல்வினையையும் தீவினையையும் உள்ளடக்கி உள்ளது.

**இ) நெடுங்கடலுந் தன்நீர்மை குன்றுந் தடிந்தெழிலி**

**தானல்கா தாகி விடின். (குறள் 17)**

கடலும் = கடல் + உம் (உயர்வுச் சிறப்பு) + தன்நீர்மை

விளக்கம்: கடலிலிருந்து எடுத்த நீரை மேகமானது திரும்ப மழையாகப் பெய்யாவிடில் வளமிக்க கடலும் குன்றும் என்பதால், இதிலுள்ள உம், கடலுடைய வளத்தின் சிறப்பை அழுத்திக்கூறி உயர்த்தியதால் இஃது உயர்வுச்சிறப்பு உம்மை. கடலின் வளமானது என்றும் குன்றாது. ஆனால், அதுவே குன்றும் நிலை ஏற்படும் என்னும் பொருள் இங்கு விளக்கப்பட்டுள்ளது.

**ஈ) சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**

**வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. (குறள் 18)**

வானோர்க்கு மீண்டு = வானோர்க்கு + உம் + ஈண்டு (உயர்வுச் சிறப்பு)

விளக்கம்: மழை நின்றால், உலகத்தில் வானவர்க்கான திருவிழாக்களும் சிறப்புப் பூசனையும் நிகழாது. வானோர்கள் என்பவர் தேவர்கள். இவர்களுக்குப் பூசனைகள் செய்வதை மாந்தர்கள் எந்தச் சூழலிலும் நிறுத்தமாட்டார்கள். ஆனால், அத்துணைச் சிறப்புக்குரிய வானோர்க்கும், உலகில் மழை பெய்யாவிடில் பூசனைகள் நிகழாது என்று கூறப்படும் இடத்தில் வானோரின் சிறப்பும் மழையின் வலிமையும் உயர்த்திக் கூறப்பட்டுள்ளன. எனவே, இஃது உயர்வுச்சிறப்பு உம்மை.

**உ) தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்**

**வானம் வழங்கா தெனின். (குறள் 19)**

தானந்தவமிரண்டும் = தானம் + தவம் + இரண்டு + உம் (முற்றும்மை)

விளக்கம்: இங்கு, தானம் தவம் என்னும் இரண்டையும் உள்ளடக்கிக் கூறுவதால் இது முற்றும்மையாகும்.

**ஊ) நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**

**வானின் றமையா தொழுக்கு. (குறள் 20)**

யார்யார்க்கும் = யார் + யார்க்கு + உம் (முற்றும்மை)

விளக்கம்: யார்யார்க்கும் என்பதில் உயர்திணை அஃறிணை உயிர்கள் உள்ளடக்கிக் கூறப்படுவதால் இது முற்றும்மையாகும்.

**எ) உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்**

**வரனென்னும் வைப்போற்கோர் வித்து. (குறள் 24)**

ஓரைந்தும் = ஓர் + ஐந்து + உம்(முற்றும்மை)

விளக்கம்: ஐந்தும் என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐம்புலன்களையும் உள்ளடக்கிக் கூறப்படுவதால் இது முற்றும்மையாகும்.

**ஏ) அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்**

**செந்தண்மை பூண்டொழுக லான்.**

எவ்வுயிர்க்கு + உம்(முற்றும்மை) + செந்தண்மை

விளக்கம்: எவ்வுயிர்க்கும் என்பதில் உயர்திணை, அஃறிணை உயிர்கள் உள்ளடக்கிக் கூறப்படுவதால் இது முற்றும்மையாகும்.

**நிறைவுரை**

குறிப்பால் பொருள் உணர்த்தும் இத்தகு தனியிடைச் சொல், திருக்குறளில் பொருளுடைய தொடர்களை உருவாக்குவதற்குத் துணை நிற்கின்றது. இவ்வாய்வில், உம் இடைச்சொல்லுக்குத் தொல்காப்பியர் குறிப்பிட்ட 8 பொருள்களில் 2 பொருள்கள் மட்டுமே முதல் 30 குறள்களில் கண்டறியப்பட்டன. எட்டுக் குறள்களில் ஆறு குறள்களில் சேர்ந்து வரும் உம் இடைச்சொல் முற்றும்மை என்னும் பொருளிலும் இதர இரு குறள்களில் சேர்ந்து வரும் உம் இடைச்சொல் சிறப்பும்மை என்கிற பொருளிலும் வழங்குவதாக ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டுள்ளன.

## துணைநூற்பட்டியல்


Navin G Ganeson, Sharan Suklam Ahthma Lingam. The usage of Oṭu, Ōṭu Urupu found in Thirukkural. (2023). Indian Journal of Tamil, 4(1) 13-19. https://doi.org/10.54392/ijot231

Nuhman, M.A. (1999). Aṭippaṭait tamiḻ ilakkaṇam. Sri Lanka. Vasagar Sangam.

Nannan, M. (2012). Tirukkuṟaḷ mūlamum viḷakka uraiyum. Chennai: Yegam Pathippagam.

Rajagopal, K. 1962. Ilakkaṇa viḷakkam (colliyal). Chennai: Star Publication.

Saravanan, S. Tirukkuṟaḷil taṉmai vikutikaḷ - moḻiyiyal pārvai. (2015). International Journal of Linguistics and Computational Applications (IJLCA), 2(3), 73 – 77.

Seeni Naina Mohamed, S. (2013). Nalla tamiḻ ilakkaṇam. Pulau Pinang: Ungalkural Enterprise.

Thamizhannal, R. (2008). Tolkāppiyam mūlamum karutturaiyum. Sinthamani Pathippagam.

Tharmalingam, T. New Parables in Thirukkural. (2023). Shanlax International Journal of Tamil Research, 8(2), 108 – 114.